பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஐப்பசி 27 | வியாழக்கிழமை | 13.11.2025 | அதிர்வு 106

## பட்ஜட் தொடர்பில் அரசுக்கு நாளை முதல் பலப்பரீட்சை



2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்று வரும் நிலையில், பாதீடு தொடர்பான முதலாவது 07

# சங்குக் கூட்டணியுடன் பேச தமிழரசு அழைப்பு

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் இணைந்த செயற்பாட்டுக்காக

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இணைந்த செயற்பாட்டைக் கருத்தில்கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் கலந்துரையாடலை நடத்த அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்துக்கமைய அந்தக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் நா.இரட்ணலிங்கத்துக்குக் கடிதம் மூலம் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். 06



# வடக்கில் போதைப்பொருள்களுக்கு இராணுவமும் பொலிஸுமே காரணம்

## நாடாளுமன்றத்தில் கஜேந்திரகுமார் எம்.பி. குற்றச்சாட்டு; அதைப் பகிரங்கமாக ஒப்புக்கொண்ட அமைச்சர் சந்திரசேகர்





“வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள்கள் விற்பனை அதிகரிக்க இராணுவத்தினர்தான் பிரதான காரணம். பொலிஸாரும் அதற்கு உடந்தையாகச் செயற்படுகின்றார்கள்.”

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டினார். 06

# போதைப்பொருளை விற்பனை செய்வதில் இராணுவம், பொலிஸ் ஈடுபடவில்லையாம்

## சபையில் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துப் பேசுவதை கஜேந்திரகுமார் தவிர்க்க வேண்டும் என்கின்றது பாதுகாப்பு அமைச்சு

“வடக்கு மாகாணத்தில் போதைப்பொருள்கள் வியாபாரத்தில் இராணுவத்தினரும், பொலிஸாரும் ஈடுபடவில்லை. ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதை நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.”

– இவ்வாறு பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரால் (ஓய்வு நிலை) அருண ஜயசேகர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் 06






இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுவும் நாடாளுமன்றக் குழுவும் இன்று மாலை இணைய வழியில் ஒன்று கூடி கலந்துரையாட இருக்கின்றன.

அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு – செலவு திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு நாளை நடைபெற இருக்கின்றது.

வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதா அல்லது நடுநிலை வகிப்பதா என்பது குறித்து இன்றைய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கட்சி இன்று எடுக்கும் முடிவை நாளை நாடாளுமன்றத்தில் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட உறுப்பினர் சாணக்கியன் தமது உரையில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசு சமர்ப்பிக்கும் வரவு – செலவுத் திட்டத்தை ஆராய்ந்து அது தொடர்பில் முடிவெடுக்கும் தீர்மானத்தை கட்சியின் அரசியல் குழுவும் நாடாளுமன்ற குழுவும் இணைய வழியில் கூடி இறுதி செய்ய வேண்டும் என அண்மையில் கூடிய 06

# அயல்நாடுகளில் குண்டுகள் வெடித்தாலும் இலங்கைக்கு எந்த ஆபத்தும் இல்லையாம்

## இப்படி நாடாளுமன்றில் கூறினார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடந்திருந்தாலும் அந்தச் சம்பவங்களால் இலங்கைக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாட்டில் உளவுத்துறை அமைப்புகள் தீவிரமாக இருப்பதால் பாதுகாப்புப் பிரச்சினை இல்லை. இலங்கைக்கு இது போன்ற அச்சுறுத்தல் இருப்பதாக எந்தத் தகவலும் இல்லை. இலங்கையின் உளவுத்துறை தீவிரமாக உள்ளது.

நமது பாதுகாப்புத்துறை, குறிப்பாக ஆயுதப் படைகள் மற்றும் பொலிஸ் பிரிவு, தேசிய பாதுகாப்பில் சிறப்புக் கவனம் செலுத்தி வருகின்றன. எனவே, தேசிய பாதுகாப்பு குறித்து எந்தக் கேள்வியும் இல்லை.” – என்றார்.




# அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்துக்கு இரவிலும் ஒன்று கூடினர் எதிர்த்தரப்பினர்

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக, நவம்பர் 21 ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ள எதிர்க்கட்சியின் எதிர்ப்பு பேரணி குறித்த கலந்துரையாடல் நேற்று இரவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய தலைவர்களிடையே நடைபெற்றது.

அரசாங்கத்துக்கு எதிராக சமீபத்திய மாதங்களில் எதிர்க்கட்சிகள் நடத்தும் முக்கிய போராட்டங்களில் ஒன்றாக இந்த போராட்டம் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த போராட்டத்துக்கான நோக்கங்கள், ஒருங்கிணைப்பு மற்றும் பொது மக்கள் பங்கேற்பு குறித்து இந்த கூட்டம் கவனம் செலுத்தப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

உதய கம்மன்பில, நாமல் ராஜபக்ஷ, சாகர காரியவசம், ராஜித சேனாரத்ன, பிரேமநாத் ஸ்ரீதொலவத்த மற்றும் எதிர்க் கட்சிகளின்பிரதிநிதிகள்பலர்இந்தகலந்துரையாடலில் கலந்துக் கொண்டனர் என தெரிவிக்கப்படுகின்றது.





# பாப்பரசர் லியோ இலங்கை வருவார்?

பாப்பரசர் லியோ இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதற்குரிய சாத்தியம் இருப்பதாகத் தெரியவருகின்றது.

வத்திக்கான் உயர் தூதுவர் ஒருவரை மேற்கோள்காட்டி கத்தோலிக்க செய்தி நிறுவனம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கைக்கும், வத்திக்கானுக்கும் இடையிலான இராஜதந்திர உறவு ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடத்துடன் 50 ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ளன. இதனையொட்டி வத்திக்கான வெளிவிவகார அமைச்சர் போல் ரிச்சர்ட் கல்லாகர், கடந்த 3ஆம் திகதி கொழும்புக்கு பயணம் மேற்கொண்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து பேச்சு நடத்திய போது, அமைதி மற்றும் உறுதித்தன்மையை நோக்கிய, இலங்கையின் முன்னேற்றத்தை அங்கீகரிக்கும் வகையில், பாப்பரசர் லியோ இலங்கைக்கு வருகை தரக் கூடும் என குறிப்பிட்டிருந்தார்.

மத மற்றும் இனக்குழுக்களிடையே அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்துவதில் இலங்கையின் முன்னேற்றத்தை பாப்பரசர் வரவேற்றுள்ளார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அவர் கொழும்பு வரக்கூடும் என தகவல் வெளியாகியுள்ளது.

# ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் காட்டு யானை தாக்கி உயிரிழப்பு



காட்டு யானை தாக்கி ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் புத்தளம், நவகத்தேகம, தம்மென்னாவெட்டிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் நவகத்தேகம, குருகெட்டியாவ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவர் ஆவார்.

இவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருக்கும் போது வீதியின் குறுக்கே இருந்த காட்டு யானை தாக்கியதால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்துள்ளது.

**வட மாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை-2025**

“மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர் வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால் அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்.”
- நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)





# கட்டுநாயக்க, சீதுவயில் 04 சந்தேகநபர்கள் கைது

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் கட்டுநாயக்க மற்றும் சீதுவ ஆகிய பகுதிகளில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பிராந்திய குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகள் குழுவினரால் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து ஐஸ் உள்ளிட்ட 21 கிராமுக்கும் அதிக போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கம்பஹா – பெம்முல்ல பகுதியில் மறைந்திருந்த நிலையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.






# கிரிந்தவில் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் ரன்மல்லிக்கு சொந்தமானதென பொலிஸார் தகவல்

கிரிந்த கடற்கரை பகுதியில் கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப்பொருள் தொகை தற்போது டுபாயில் வசிக்கும் போதைப் பொருள் கடத்தல்காரரான "ரன்மல்லி" என்பவருக்கு சொந்தமானதென தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

345 கிலோகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 07 சந்தேகநபர்கள் நேற்று அதிகாலை முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த போதைப்பொருள்களை கடல் மார்க்கமாக படகின் மூலம் நாட்டிற்கு கொண்டுவந்ததாக கூறப்படும் பிரதான சந்தேகநபரும் கைது செய்யப்பட்டவர்களில் உள்ளடங்குகின்றார்.

சம்பவத்துடன் தொடர்புடைய 06 வாகனங்களும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. போதைப்பொருள்களை கொண்டுவந்ததாக கூறப்படும் படகு இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

மேல் மாகாண வடக்கு குற்ற விசாரணை பிரிவின் அதிகாரிகள் குழுவினால்இந்தசுற்றிவளைப்புமுன்னெடுக்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யூ.வூட்லர் தெரிவித்துள்ளார்.

இந்த சுற்றிவளைப்பிற்கு தங்காலை பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பும் கிடைத்துள்ளது.




# தபால் சேவையில் பிறப்புச் சான்றிதழ்

தேசிய பிறப்புச் சான்றிதழ்களை இலங்கை தபால் பொதிகள் சேவை மூலம் நேரடியாக மக்களுக்கு விநியோகிக்கும் முன்னோடித் திட்டத்தை நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாகப் பதிவாளர் நாயகத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்தத்திட்டம்கம்பஹாமாவட்டச்செயலகத்தில், பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபேரத்னவின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உத்தியோகபூர்வ ஆவணங்களைப் பாதுகாப்பாகவும் வினைத்திறனுடனும் வழங்குவதற்காகப் பதிவாளர் நாயகத் திணைக்களம் மற்றும் தபால் திணைக்களம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக இது கருதப்படுகிறது.

மின்னணுப் பிறப்புப் பதிவுத் திட்டத்தின் கீழ் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

தற்போது, இது ஜனவரி 1, 2021 இற்குப் பின்னர் பிறந்த குழந்தைகளுக்கான பிறப்புச் சான்றிதழ்களை வழங்குவதை உள்ளடக்கியுள்ளது.

இந்த புதிய திட்டம், பொதுமக்களுக்கு வேகமான மற்றும் நம்பகமான சேவையை உறுதி செய்யும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தபால் திணைக்களத்துடன் விரைவில் ஒரு முறையான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு, இந்தச் சேவை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படும் என்றும் இந்த முயற்சியை ஒரு வரலாற்றுச் சாதனை என்றும் அமைச்சர் சந்தன அபேரத்ன பாராட்டினார்.

இந்த நடவடிக்கை, பொதுச் சேவை விநியோகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அரசாங்கத்தின் பரந்த டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுடன் இணைகிறது என்றும் அவர் மேலும் கூறினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கட்சியின் மத்திய குழு தீர்மானித்திருந் தமை தெரிந்ததே.

இதற்கிடையில் –

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வரவு – செலவுத்திட்டம் மீதான 3 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் 'கிவுல் ஓயா' நீர்த் தேக்க திட்டத்திற்கு இந்த வரவு – செலவுத் திட்டத்தில் 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை தமிழ் மக்கள் மீதான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் வடிவமாகும் எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீக குளங்கள், வயல் காணிகள், பழந்தமிழ் கிராமங்கள் என்பவற்றை ஆக்கிரமித்து மகாவலி அபிவிருத்தி அதி கார சபையின், (எல்)வலய பிரிவால் 'கிவுல் ஓயா' நீர்த் தேக்கத் திட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

"வவுனியாவின் பூர்வீகத் தமிழ்மக் களுக்குப் பாதகமான கிவுல் ஓயா திட் டத்தை மிகக் கடுமையாக எதிர்க்கிறேன். கிவுல் ஓயாத் திட்டத்தைச் செயற்படுத்தி னால் வவுனியா வடக்கு பிரதேசத்திலுள்ள பூர்வீகத் தமிழ் மக்களின் பத்திற்கும் மேற் பட்ட சிறிய நீர்பாசனக் குளங்களும், அவற்றின் கீழான வயல் நிலங்களும், பழந்தமிழ் கிராமங்களும் பறிபோகும் அபாயம் ஏற்படவுள்ளது" என்று எச்சரித் தார் அவர்.

இத்தகைய ஆபத்துகள் கொண்ட இந்த வரவு – செலவுத் திட்ட சதியை தமிழ ரசுக் கட்சி எதிர்க்காமல் விட முடியாது என்று நினைக்கிறேன்.

* * *

கங்கொடவில நீதவான் நீதிமன்றத் தில் ஒரு வழக்கு.

மஹிந்த ராஜபக்ஷவின் ஒரு மக னான யோஷித ராஜபக்ஷவும் அவரின் பாட்டியாரான டெய்சி ஃபாரெஸ்ட் விக்கி ரமசிங்கவும் இந்த வழக்கில் எதிராளிகள்.

அவர்கள் இருவரினதும் கூட்டு வங்கிக் கணக்கில் சுமார் ஐந்து கோடி 90 லட்சம் ரூபா இருந்தது. அது பணச் சலவை மோசடி மூலம் சேர்த்துக்கொண்ட பணம் என்று அரசுத் தரப்பில் குற்றம் சுமத் தப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் 98 வயதான டெய்சி ஃபாரெஸ்ட் விக்கிரமசிங்க நினைவாற்றல் இழப்பு அல்லது டிமென்ஷியா நோய் பாதிப்பு இருப்பதால் அவரை வழக்கில் இருந்து விடுவிக்குமாறு அவரது தரப்பு சட்டத்தரணிகளினால் நீதிமன்றத்தில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் 2017 ஆம் ஆண்டிலேயே டெய்சி ஃபாரெஸ்ட் விக்கிரமசிங்க தனது சொந்த சொத்தை நிர்வகிக்க இயலா தவர் என்று நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்ப ளித்துள்ளதாகவும், அதன் பிறகு அது வேறொருவரின் பராமரிப்பில் வைக்கப் பட்டதாகவும் கூறி அவரது சட்டத்தரணிகள் மருத்துவ அறிக்கைகளை நீதிமன்றத் தில் சமர்ப்பித்துள்ளனர்.

இருப்பினும் சட்டமா அதிபர் சார்பாக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார, டெய்சி ஃபாரெஸ்ட் விக் கிரமசிங்கவின் நிலைமையை ஆராய ஒரு சிறப்பு மருத்துவக் குழுவை நிய மிக்க வேண்டும் என்று நீதிமன்றத்தில் கோரியிருக்கிறார்.

பாவம் 98 வயோதிப மாது...! ராஜபக் ஷக்களின் சொத்து இழுபறியில் நீதி மன்ற அலைச்சலைச் சந்திக்க வேண்டி யவராக இருக்கிறார். அரசு தரப்பும் 'விடாக் கண்டன், கொடாக்கண்டன்' போல அவ ரையும் போட்டு நோண்டித் தள்ளுவதில் உறுதியாக இருக்கின்றது.

வழக்கு வரும் 26 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் என்ன முடிவு செய்யப் போகின்றது என்பதைப் பார்த்திருக்கலாம்.

---

## வடக்கில் போதைப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றிய அமைச்சர் சந்திரசேகர், வடக்கு, கிழக்கின் கல்வி நிலை மற்றும் போதைப்பொருள் மாபி யாக்கள் பற்றி கருத்துக்களை வெளியிட் டார்.

இதன்போது எழுந்த கஜேந்திரகுமார் எம்.பி.,

"வடக்கில் கடந்த ஏழு மாதங்களாக கல்வி நிலை மேம்பட்டுள்ளது எனச் சொன் னீர்கள். இதனை ஆதாரபூர்வமாக வெளிப் படுத்துங்கள்.

வடக்கில் போதைப்பொருள்கள் விற் பனை அதிகரிக்க இராணுவத்தினர்தான் பிரதான காரணம். பொலிஸாரும் அதற்கு உடந்தையாகச் செயற்படுகின்றார்கள். எனவே, வடக்கிலிருந்து இராணுவத்தினர் எப்போது வெளியேற்றப்படுவார்கள்?" – என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சந்திர சேகர்,

"போதைப்பொருளுக்கு பின்னால் இராணுவமும் பொலிஸும் உள்ளது எனக் குற்றஞ்சாட்டினீர்கள். அதில் உண்மை உள்ளது. ஆனால், இராணுவத்தின ரும் பொலிஸாரும் வேறாக இல்லை. அங் குள்ள மாபியாக்களுடன் அவர்கள் இணைந்துள்ளனர். அந்த மாபியாக் களுடன் தமிழ் அரசியல்வாதிகளும் பிணைந்துள்ளனர். அவ்வாறானவர்கள் கைது செய்யப்பட்டும் உள்ளனர்." – என் றார்.

ஆனால், வடக்கிலிருந்து இராணுவ வெளியேற்றம் குறித்து அமைச்சர் சந்திர சேகர் நேரடிப் பதிலை வழங்கவில்லை.

வடக்கில் இராணுவத்தினர், பொலிஸார் போதைப்பொருள் விடயத்தில் சம்பந்தப் பட்டிருப்பதை அமைச்சர் சந்திரசேகர் ஒப் புக்கொண்டதை வரவேற்கின்றேன் என்று கஜேந்திரகுமார் எம்.பி. இதன்போது குறிப்பிட்டார்.

இராணுவத்தைப் பொறுப்புக்கூற வைக்காமல், மாபியாக்களை ஒழிக்க முடியாது என்றும் கஜேந்திரகுமார் எம். பி. சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் சந்திர சேகர்,

"ஒட்டுமொத்த இராணுவத்தினர் மற் றும் ஒட்டுமொத்த பொலிஸார் மீது நான் பழிசுமத்தவில்லை. ஓரிருவரைப் பற்றித் தான் குறிப்பிடுகின்றேன். மாபியாக் களின் பின்னால் தமிழ் அரசியல்வா திகள் உள்ளனர் என்பதை மறந்துவிடக் கூடாது." – என்றார்.

---

## சங்குக் கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழினம் சார்ந்த பல பொது விடயங்க ளில் தமிழ்த் தேசியக்

கட்சிகளின் ஒற்றுமையின்மை தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற பாரிய விமர்சனங்கள் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற் குழு கடந்த வாரம் நடந்த கூட்டத்தில் ஆராய்ந்தது.

அதன் அடிப்படையில் தமிழ்த் தேசி யக் கட்சிகள் முக்கியமான சகல பொது விடயங்களில் இணைக்கப்பாட்டுடன் இணைந்து செயற்படுவது காலத்தின் தேவை எனக் கருதி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் ஒரு பூர்வாங் கக் கலந்துரையாடலை நடத்துவற்கு உத்தேசித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி கடிதம் மூலம் அழைப்பு விடுத்துள் ளது.

இந்நிலையில், அந்தக் கடிதத்துக்குப் பதிலளித்துள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர், "உங் கள் கடிதம் குறித்து கூட்டணிக்குள் ஆராய்ந்து இயன்றளவு விரைவாகப் பதிலளிக்க நடவடிக்கை எடுப்பேன்." – தெரிவித்துள்ளார்.

---

## போதைப்பொருளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டாம் வாசிப்பு மீதான நான்காம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

அங்கு அவர் மேலும்
உரையாற்றுகையில்,

"வடக்கில் போதைப்பொருள் வியா பாரத்தில் இராணுவத்தினரும், பொலிஸா ரும் ஈடுபடுகின்றனர் என்று நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன் னம்பலம் குறிப்பிடுகின்றார். அவ்வாறு முறையற்ற வகையில் செயற்படும் இரா ணுவத்தினர், பொலிஸார் யார், அவர்க ளின் சேவை பிரதேசம் தொடர்பான விவ ரங்களை அவர் வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு குறிப்பிட்டால் ஆராய்ந்து பார்ப்போம். இவர் குறிப்பிடுவதைப் போன்று பாதுகாப்புத் தரப்பினர் போதைப் பொருள் வியாபாரத்துடன் தொடர்புபட வில்லை.

கடந்த காலங்களில் அரசுகள் எடுத்த தவறான தீர்மானங்களினால் நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் மிக மோச மாகப்பாதிக்கப்பட்டார்கள். அரசநிதிமுறை யற்ற வகையில் பயன்படுத்தப்பட்டதால் நாடும் வங்குரோத்து நிலையடைந் தது.

தேசிய மக்கள் சக்தி மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை சிறந்த முறை யில் செயற்படுத்தி வருகின்றது. எதிர்க் கட்சியினர்தான் கலக்கமடைந்து போலி யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருக்கின்றார்கள்.

கடந்த கால அரசுகள் பிணைமுறி மோசடி, தேங்காய் எண்ணெய் மோசடி, சீனி மோசடி, வெள்ளைப் பூண்டு உட்பட பாரதூரமான மோசடிகளால்தான் பிர பல்யமடைந்தன.

பொருளாதாரத்துக்குப் பாதிப்பு ஏற் படாத வகையில் 2026 ஆம் ஆண்டுக் கான வரவு – செலவுத் திட்டத்தைத் தயா ரித்துள்ளோம். நிதி ஒழுக்கம் தற்போது கடுமையான முறையில் பேணப்படு கின்றது. கடந்த காலங்களைப் போன்று முறையற்ற வகையில் வரவு – செலவுத் திட்டத்தைத் தயாரிக்கவில்லை. மக்க ளுக்கு போலியான நிவாரணங்களை வழங்கும் வாக்குறுதிகளை வழங்க வில்லை. மக்களுக்கு சாதகமான முறை யில் தான் இந்த வரவு – செலவுத் திட்டம்

# வவுனியா பேராறு நீர்த்தேக்கத்தில் இறந்து கரையொதுங்கும் மீன்கள்

## அதனை உண்ண வேண்டாம் என்று தவிசாளர் பாலேந்திரன் எச்சரிக்கை







(கி.வசந்தன்)

வவுனியா மாவட்டத்தின் புதுக்குளம் – பேராறு நீர்த்தேக்கத்தில் மிக அதிகளவான மீன்கள் நேற்று மாலை தொடக்கம் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

மீன்களின் இறப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் அந்த நீர்த்தேக்கத்தில் மீன்பிடியில் ஈடுபடுபவர்களை மீன்பிடியைத் தற்போதைக்குத் தவிர்க்குமாறும், பொதுமக்கள் அந்த நீர்த்தேக்கத்தில் பிடிக்கப்பட்ட மீன்களை வாங்குவதை முற்றுமுழுதாகத் தவிர்க்குமாறும் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை தவிசாளர் பா.பாலேந்திரன் அறிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அநுர அரசின் பயணம் சிறப்பு

## பொன்சேகா புகழாரம்

“இலங்கையில் கடந்த கால அரசுகள் பயணித்ததைவிட தற்போதைய அரசின் பயணம் சிறப்பாக உள்ளது.”

– இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“தேசிய மக்கள் சக்தி அரசு, ஊழல்வாதிகள் மற்றும் மோசடியாளர்களுக்கு இடமளிக்கப்படவில்லை என்பதை நாம் ஏற்றாக வேண்டும்.

அதேபோலஊழல்வலையமைப்பைமுற்றாகஇல்லாதொழிப்பதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். ஆனால் அதற்குரிய முயற்சி இந்த அரசால் எடுக்கப்படுவதை மதிக்கின்றோம் வரவேற்கின்றோம்.

ரணில் விக்கிரமசிங்கதான் என்னை அரசியலுக்குக் கொண்டு வந்தார். அவரைச் சிறையில் அடைத்தபோது கவலை அடைந்தேன். எனினும், இதன்மூலம் இந்த அரசு



சிறந்த முன்னுதாரணத்தை வழங்கியது.

நாட்டில் அனைவருக்கும் ஒரே கரண்டியில்தான் பகிரப்படுகின்றது என்பதே இதன்மூலம் வழங்கப்பட்ட செய்தியாகும். இதனை நாம் மதிக்க வேண்டும்.” – என்றார்.

## பட்ஜட் தொடர்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பலப்பரீட்சையை தேசிய மக்கள் சக்தி நாளை வெள்ளிக்கிழமை எதிர்கொள்கின்றது. இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நாளை மாலை இடம்பெறவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடந்த 7 ஆம் திகதி வரவு – செலவுத் திட்டத்தை முன்வைத்தார்.

இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் 8 ஆம் திகதி ஆரம்பமானது. நாளை 14 ஆம் திகதி வரை விவாதம் நடைபெறும்.

நாளை மாலை இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இதன்போது எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பது தொடர்பில் ஆராய்வதற்காக அரசியல் கட்சிகளின் கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன பாதீட்டுக்கு எதிராக வாக்களிக்கும் எனத் தெரியவருகின்றது. தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது நிலைப்பாட்டை இன்று அறிவிக்கவுள்ளன.

பாதீட்டை நிறைவேற்றிக்கொள்வதற்குரிய பெரும்பான்மைப் பலம் தன்வசம் உள்ள போதிலும், எதிரணிகளும் வரவு – செலவுத் திட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்று அரசு எதிர்பார்க்கின்றது.

அதேவேளை, அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதம் நாளைமறுதினம் 15ஆம் திகதி ஆரம்பமாகும். பாதீடு மீதான இறுதி வாக்கெடுப்பு எதிர்வரும் டிசம்பர் 5 ஆம் திகதி நடைபெறும்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மருத்துவப் பிரச்சினை

இலங்கையின் இலவச சுகாதார அமைப்பு கடும் நெருக்கடியைச் சந்தித்து வருகின்றது என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஊழியர்கள் பற்றாக்குறை, மருந்துப் பற்றாக்குறை மற்றும் அத்தியாவசிய மருத்துவ உபகரணப் பற்றாக்குறை போன்ற நீண்டகாலப் பிரச்சினைகளுக்கு 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தீர்வு காண அரசு தவறிவிட்டது என்று அந்தச் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

அதேசமயம் -

நாட்டை விட்டு வெளியேறும் மருத்துவர்களினால் இலங்கையின்சுகாதார-மருத்துவத்துறைமோசமான பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றமை குறித்து தொடர்ந்து செய்திகள் வெளியாகி வருகின்றன. தீர்க்க முடியாத இந்தப் பிரச்சினையின் ஒரு பகுதியாக சிறப்பு மருத்துவர்களின் (Specialist Doctors) பற்றாக்குறையால் இலங்கையின் சுகாதார அமைப்பு அவதிப்பட்டு வருவது பற்றிய விவரங்கள் வெளியாகியுள்ளன.

ஒவ்வொரு ஆண்டும் சுமார் 25 சிறப்பு மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். இது நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளைக் கடுமையாக பாதிக்கிறது என்று மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் மருத்துவர்களின் தொழிற்சங்க கூட்டணியின் தலைவர் சிறப்பு மருத்துவர் சமல் சஞ்சீவ எச்சரிக்கின்றார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் இந்த ஆண்டு ஏப்ரல் வரை 24 சிறப்பு மருத்துவர்கள் நாட்டின் சுகாதார சேவையை விட்டு வெளியேறியமையை தொழில்சார் சுகாதார சேவைகள் இயக்குநர் டாக்டர் பிரியந்த அத்தப்பத்து வெளியிட்ட அறிக்கை, உறுதிப்படுத்துகிறது.

அறிக்கையின்படி, தேசிய சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இலங்கையில் 3,181 சிறப்பு மருத்துவர்கள் தேவைப்படுகிறார்கள். ஆனால் தற்போது 2,042 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். 1,100க்கும் மேற்பட்ட நிபுணர்களின் பற்றாக்குறை நாட்டில் உள்ளது.

பல துறைகளில் பற்றாக்குறைகள் கடுமையாக உள்ளன. சுமார் 200 மயக்க மருந்து நிபுணர்கள், 150 இயன்மருத்துவர்கள், 100 அறுவை சிகிச்சை நிபுணர்கள், 100 மகளிர் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மகப்பேற்று மருத்துவர்கள், ஏறத்தாழ 100 குழந்தை மருத்துவர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். தடயவியல் மருத்துவ நிபுணர்களின் பற்றாக்குறையும் அதிகரித்து வருகிறது. தேவையான 64 பேரில் தற்போது 41 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். 100 எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் தேவைப்பட்டாலும், தற்போது 47 பேர் மட்டுமே சேவையில் உள்ளனர் என அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

நாடு முழுவதும் மருத்துவமனை செயல்பாடுகள் மற்றும் நோயாளி பராமரிப்புக்கு நிலைமை ஏற்கனவே தடைப்படத் தொடங்கியுள்ளது என்று டாக்டர் சஞ்சீவா கூறுகின்றார். நிபுணர்களின் எண்ணிக்கையை விரிவுபடுத்துவதற்கும் தற்போது பயிற்சி பெறுபவர்களைத் தக்கவைத்துக் கொள்வதற்கும் நீண்டகால உத்திகளைஉருவாக்கசுகாதாரஅமைச்சகத்தையும் முதுகலை மருத்துவ நிறுவனத்தையும் அவர் வலியுறுத்தினார்.

“இது வெறும் பணியாளர் பிரச்சினை அல்ல - இது முழு சுகாதார அமைப்புக்கும் அச்சுறுத்தல் என்பதை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்,” என்று டாக்டர் சஞ்சீவா எச்சரித்தார்.



# கொழும்பு - முல்லைத்தீவு குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை நேற்று முதல் ஆரம்பம்

## தமது தொடர் முயற்சி வெற்றியளித்திருப்பதாக ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

கொழும்பிலிருந்து முல்லைத்தீவிற்கான குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை நேற்றுக் காலை 08.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த பஸ் சேவை விவகாரத்தில் தமது தொடர் முயற்சிக்கு கிடைத்த வெற்றி இதுவென வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

நேற்று இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

முல்லைத்தீவிலிருந்து கொழும்பிற்கான குளிரூட்டப்பட்ட சொகுசுப் பஸ் சேவை ஒன்று இன்மையால் முல்லைத்தீவில் மக்கள் பலரும் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

குறிப்பாக முல்லைத்தீவு மக்களுடன், வெளிமாவட்டங்களிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திற்கு சேவையாற்ற வருகின்ற வைத்தியர்கள் மற்றும், திணைக்கள உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினர் இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வந்தனர்.

இந்தனால் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த வைத்தியர்கள், திணைக்கள உயர் அதிகாரிகள் முல்லைத்தீவிற்கு வருகைதந்து பணியாற்றுவதில் அதிக நாட்டம் கொள்ளாத நிலையும் காணப்பட்டது.

இது தொடர்பில் என்னிடம் பல தரப்பினரும் முறையீடுகளைச் செய்திருந்தனர்.

கடந்த 29.05.2025அன்று முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற, முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் முல்லைத்தீவு - கொழும்பிற்கான சொகுசுபஸ்சேவைஒன்றினைஆரம்பிக்க வேண்டுமென என்னால் தீர்மானம் ஒன்று முன்மொழியப்பட்டது. அந்தத் தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்தத் தீர்மானத்தை உரிய அமைச்சிற்கும் அனுப்பிவைப்பதெனவும் முடிவெடுக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து கடந்த 22.07.2025 பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக்குழுக்கூட்டத்திலும் இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்படவேண்டுமென அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிடம் வலியுறுத்தியிருந்தேன்.

அதையடுத்து இந்தச் வையை ஆரம்பிப்பது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டு ஆய்வறிக்கைகளைத் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் விமல் ரத்நாயக்க அமைச்சின் அதிகாரிகளிடம் தெரிவித்தார். ஆய்வறிக்கைகள் கிடைத்ததும் அது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என என்னிடம் அமைச்சர் தெரிவித்திருந்தார்.

இதனைத்தொடர்ந்து கடந்த 09.10.2025அன்று இடம்பெற்ற அமைச்சு-சார் ஆலோசனைக் கூட்டத்தில் தொடர்பில் மீண்டும் கேள்வி எழுப்பியிருந்தேன்.

இத்தகையசூழலில்கடந்த15.10.2025 ஆம் திகதியன்று அமைச்சு மட்ட அதிகாரிகளுடன் விசேடகூட்டமொன்று இருப்பதாகவும் அக்கூட்டத்தில் இந்தவிடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு, ஒக்டோபர் மாத இறுதிப்பகுதிக்குள் முல்லைத்தீவிற்கான குளிரூட்டப்பட்ட சொகுசு பஸ் சேவை ஆரம்பிக்கப்படும் என அமைச்சர் பிமல் ரத்நாயக்கவினால் எனக்கு பதில் தரப்பட்டிருந்தது.

இவ்வாறாக ஒக்டோபர்மாத இறுதிப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்படுவதாக கூறப்பட்ட இந்த பஸ் சேவை குறித்த காலப்பகுதிக்குள் ஆரம்பிக்கப்படாதநிலையில், நாடாளுமன்றில் கடந்த 11.11.2025அன்று இடம்பெற்ற 2026ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதும் அதனைச் சுட்டிக் காட்டிப் பேசியிருந்தேன்.

தொடர்சியாக எம்மால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்ததன் பயனாக இன்று (நேற்று) கொழும்பிலிருந்து காலை 08.30மணிக்கு முல்லைத்தீவிற்கான குளிரூட்டப்பட்ட பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இன்று (நேற்று) 12ஆம் திகதி) இரவு 09.30மணிக்கு முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பிலிருந்து கொழும்பிற்கான குளிரூட்டப்பட்ட பஸ் சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளதான மகிழ்ச்சியான செய்தியும் எமக்குகிடைத்திருக்கின்றது. இந்தபோக்குவரத்துச் சேவை இனி தொடர்ச்சியாக இடம்பெறும்.

எனவே எமது தொடர்ச்சியான கோரிக்கைகளுக்குச் செவிசாய்த்து, முல்லைத்தீவிற்கான இந்தச் சேவையை ஆரம்பித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கவிற்கு எமது முல்லைத்தீவு மாவட்ட மக்கள் சார்பாக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்.

# அஸ்வெசும கொடுப்பனவு இன்று வங்கிக் கணக்குகளில்




நவம்பர் மாதத்திற்கான அஸ்வெசும கொடுப்பனவு இன்று பயனாளர்களின் வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்படவுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 1,415,738 குடும்பங்களுக்கான கொடுப்பனவு இன்று அவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படவுள்ளது.

இதற்காக 11.2 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.





# வட்டியில்லாக் கடன் திட்டத்தின் மூலமாக உயர் கல்விக்கு மாணவர்களை உள்ளீர்ப்பு

## திருகோணமலையில் தெளிவூட்டல் நிகழ்ச்சி

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்டத்தில் கல்வி அமைச்சின் வட்டியில்லாக் கடன் திட்டத்தின் மூலம் உயர் கல்விக்கு மாணவர்களை உள்ளீர்ப்பு செய்வது தொடர்பான தெளிவூட்டல் நிகழ்ச்சி திட்டம் நேற்று முன்தினம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

2022, 2023, 2024 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதி இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களில் அனுமதி கிடைக்காது, பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்து பொது அறிவு பரீட்சையில் 30 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கென இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 18 தனியார் பல்கலைக்கழகங்களில் அரச வங்கிகளான இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கிகளின் கல்விக் கடன் திட்டத்தின் ஊடாக வட்டியில்லாக் கடன் பெற்று உயர்கல்வி வாய்ப்பினை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பில் தெளிவூட்டல் வழங்கப்பட்டது.

மாணவர் கடன் பிரிவு உதவிப் பணிப்பாளர் கே.வி.எம்.சதுரங்கனி, அரச சார்பற்ற உயர்கல்வி பிரிவு உதவிப் பணிப்பாளர் சஜினி விஜேசிறிவர்தன. திறன் மற்றும் தொழிற்கல்விப் பிரிவு மாவட்ட இணைப்பாளர் கே.மதுரன், துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.






# கல்முனையில் இரண்டு நாள்களாக நடைபெற்ற கிழக்கு மாகாணக் கண்காட்சியும் விற்பனையும்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களம் ஏற்பாடு செய்து நடத்திய மாகாண கண்காட்சியும் விற்பனையும் கடந்த 10,11 ஆம் திகதிகள் இரு நாள்களாக கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்விற்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சிக் கூடத்தை திறந்து வைத்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர் இஸட்.ஏ.எம்.பைசால் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் கே. இளங்குமுதன், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெகராஜன், மாகாண சுற்றுலாத் துறை பணியகத்தின் தவிசாளர் எம்.ஜி பிரியந்த, கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் அதிபர் பிரதர் எஸ்.ஈ ரெஜினோல்ட் எவ்.எஸ்.சி மற்றும் கிராமிய அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள், பயிற்சி நிலையங்களின் ஆசிரியர்கள், அதிகாரிகள் எனப் பலரும் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தக் கண்காட்சியும் விற்பனையும் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரையும் என இரு நாள்களாக நடைபெற்று நிறைவடைந்தது.

இறுதிநிகழ்வில்கிராமியஅபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் வலுவூட்டல் பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ பிரதம அதிதியாக கலந்து கொண்டு கண்காட்சியை பார்வையிட்டமையுடன் மாதர் அபிவிருத்தி சங்கங்களின் உற்பத்திகள் மற்றும் பயிற்சிகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இங்கு, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையங்களில் தையல், கைவினைப், மனையியல் பொருள்கள், கேக் அலங்காரம் மணப்பெண் அலங்கார காட்சிகள், சிறு கைத்தொழில் முயற்சியாளர்களின் காட்சிக்கூடங்கள் என பல்வேறு உற்பத்தி கண்காட்சி மற்றும் விற்பனைகள் இடம்பெற்றன.

இதேவேளை மாதர் அபிவிருத்தி பயிற்சி நிலையங்களுக்கிடையில் உற்பத்தி மற்றும் தயாரிப்புப் போட்டி நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இதில் வெற்றி பெற்றவர்கள் சான்றிதழ் மற்றும் விருதுகளும் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

மாவட்ட அடிப்படையில் அம்பாறை மாவட்டம் முதலிடத்தையும் இரண்டாம், மூன்றாம் இடங்களை மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்ளும் பெற்றுக் கொண்டன.

மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகளுடன் நடைபெற்ற இக்கண்காட்சி இறுதி நாள் நிகழ்வுகளில், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜெ. அதிசயராஜ், கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட உத்தியோகத்தர் எம்.ரி.ஏ.நாஹிப், மட்டக்களப்பு மாவட்ட உத்தியோகத்தர் பி.கோகுலராஜன், திருகோணமலை மாவட்ட உத்தியோகத்தர் எஸ்.பத்மராசா உட்பட பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





## செங்கோட்டை கார் வெடிப்பு:

# பயங்கரவாத சம்பவமென மத்திய அரசு அறிவித்தது

டில்லி – செங்கோட்டை கார் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நேற்று நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் டில்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்த சம்பவத்துக்கு காரணமானவர்கள், அவர்களுக்கு ஆதரவாக செயல்பட்டவர்கள், அவர்களுக்கு உதவியவர்கள் என அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டது. இந்த சம்பவம் குறித்த விசாரணை விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என விசாரணை அமைப்புகளுக்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை கூட்டத்தில்டில்லி கார் குண்டு வெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்த அப்பாவி மக்களின் ஆன்மா சாந்தியடைய இந்த கூட்டத்தில் 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

தேசவிரோத சக்திகளால் நடத்தப்பட்ட இந்த பயங்கரவாத சம்பவத்தை நாடு எதிர்கொண்டுள்ளது. பயங்கரவாதத்தின் அனைத்து வடிவத்தின் மீதும் துளியளவும் சகிப்புத்தன்மை காட்ட முடியாது என்ற கொள்கையில் இந்தியா உறுதியாக உள்ளது. கொடூரமான மற்றும் கோழைத்தனமான இந்த செயலை மத்திய அமைச்சரவை சந்தேகத்துக்கு இடமின்றி கண்டிக்கிறது என கூட்டத்துக்கு பிறகு மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

டில்லி – செங்கோட்டை அருகே திங்கள் கிழமை மாலை சுமார் 7 மணி அளவில் நடந்த கார் வெடிப்பு சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த குண்டுவெடிப்பில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆக உயர்ந்துள்ளது. மேலும் படுகாயமடைந்த 20 இற்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# டில்லி குண்டுவெடிப்பில் காயமடைந்து சிகிச்சை பெறுவோருக்கு மோடி ஆறுதல்



செங்கோட்டை அருகே நடந்த குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களை பிரதமர் நரேந்திர மோடி நேற்று லோக் நாயக் ஜெய் பிரகாஷ் மருத்துவமனையில் நேரில் சந்தித்தார்.

இரண்டு நாள்கள் உத்தியோகபூர்வ பயணமாக பூடானுக்குச் சென்றிருந்த பிரதமர் மோடி, டில்லியில் தரையிறங்கிய உடன் நேராக எல்.என்.ஜே.பி. மருத்துவமனைக்குச் சென்றார்.

காயமடைந்தவர்களை பிரதமர் மோடி தனித்தனியாகச் சந்தித்து உரையாடினார் எனவும் அவர்கள் விரைவில் குணமடைய வாழ்த்தினார் எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், மருத்துவமனையில் அதிகாரிகள் மற்றும் மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்று வருவோரின் உடல் நிலை, அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.

பிரதமர் மோடியின் வருகையை முன்னிட்டு, எல்.என்.ஜே.பி. மருத்துவமனைக்கு வெளியே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. அவர் பிரதான நுழைவாயிலில் ஊடகங்களைத் தவிர்த்து, பிரத்யேக பின்புற வாயில் வழியாக மருத்துவமனைக்குள் சென்றார்.

# செங்கோட்டைக் குண்டுவெடிப்பில் எங்களுக்கு எத்தொடர்பும் இல்லை

## அல் ஃபலா பல்கலைக்கழகம் அறிவிப்பு




டில்லி குண்டுவெடிப்பு சம்பவத்துக்கும் தங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று அல் ஃபலா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

டில்லி செங்கோட்டை நிகழ்ந்த கார் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பான விசாரணை தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) வசம் உள்துறை அமைச்சகத்தால் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து, இந்த விசாரணையை துரிதப்படுத்த சிறப்பு விசாரணைக் குழுவை என்.ஐ.ஏ. நேற்று நியமித்துள்ளது.

குண்டுவெடிப்பை நிகழ்ந்திய உமர் முகமது நபி, டில்லி அருகே ஃபரிதாபாத்தில் உள்ள அல் ஃபலா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணியாற்றி வந்தவர். இந்த குண்டுவெடிப்பில் தொடர்புடைய மற்றொரு மருத்துவரான முஜாம்மில் ஷகில் என்பவரும் இதே மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு ஜெய்ஷ் இ முகம்மது தீவிரவாத அமைப்புடன் தொடர்பு இருப்பது விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, அல் ஃபலா பல்கலைக்கழகத்தின் மீது புலனாய்வு அமைப்புகளின் பார்வை திரும்பி இருக்கிறது. மேலும், அல் ஃபலா பல்கலைக்கழகம் தொடர்பாக மின்னணு ஊடகங்களில் பல்வேறு கருத்துக்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில், இந்த சம்பவத்துக்கும் தங்கள் பல்கலைக்கழகத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று அல் ஃபலா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள அந்த பல்கலைக்கழகம், "நடந்த துரதிருஷ்டவசமான நிகழ்வுகளால் நாங்கள் மிகவும் வருத்தமும் வேதனையும் அடைகிறோம். இதை நாங்கள் கண்டிக்கிறோம். இந்த துயரமான நிகழ்வால் பாதிக்கப்பட்ட அனைத்து அப்பாவி பொதுமக்களுடனும் எங்கள் எண்ணங்களும் பிரார்த்தனைகளும் உள்ளன.

எங்கள் நிறுவனத்தின் இரண்டு மருத்துவர்கள் புலனாய்வு அமைப்புகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர் என நாங்கள் அறிகிறோம். அவர்கள் எங்கள் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுபவர்கள் என்பதைத் தவிர பல்கலைக்கழகத்துக்கும் அவர்களுக்கும் வேறு எந்த தொடர்பும் இல்லை என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறோம்.

பல்கலைக்கழகத்தின் நற்பெயரை கெடுக்கும் நோக்கில் சில ஆன்லைன் தளங்கள் அடிப்படையற்ற தவறான செய்திகளை பரப்புகின்றன. இதுபோன்ற அனைத்து தவறான மற்றும் அவதூறான குற்றச்சாட்டுக்களையும் நாங்கள் கடுமையாக கண்டிக்கிறோம், எங்கள் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை திட்டவட்டமாக மறுக்கிறோம்.

ஒரு பொறுப்பான நிறுவனமாக நாங்கள் நாட்டின் ஒற்றுமை, அமைதி, பாதுகாப்புக்கான எங்கள் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம். தேசிய பாதுகாப்பு தொடர்பாக நியாயமான, உறுதியான முடிவை எட்டுவதற்கு சம்பந்தப்பட்ட விசாரணை அதிகாரிகளுக்கு பல்கலைக்கழகம் தனது முழு ஒத்துழைப்பை வழங்குகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகம் முழுவதிலும் இருந்து திறமையாளர்களை அமெரிக்கா ஈர்ப்பது முக்கியம் என்கிறார் ட்ரம்ப்



எச் -1பி விசாவுக்கான கட்டுப்பாடுகளை அதிகரித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், திடீர் திருப்பமாக உலகம் முழுவதிலும் இருந்து திறமையாளர்களை அமெரிக்காவுக்கு அழைத்து வர வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உடன், ஃபாக்ஸ் நியூஸ் தொலைக்காட்சியின் செய்தியாளர் லாரா இங்க்ராஹாம் நேர்காணல் நடத்தினார். அப்போது, எச் -1பி விசா கட்டுப்பாடுகள் உங்கள் நிர்வாகத்துக்கு ஒரு பெரிய முன்னுரிமையாக இருக்குமா என கேள்வி எழுப்பினார். அதற்கு பதில் அளித்த ட்ரம்ப், திறமையானவர்களை நாம் நமது நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்றார்.

அமெரிக்காவில் ஏராளமான திறமையாளர்கள் இருக்கிறார்களே என்று செய்தியாளர் குறிப்பிட்டதற்கு, "இல்லை. இல்லை. அமெரிக்கர்களிடம் சில திறமைகள் இல்லை. அவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும்.

இங்கே வேலையில்லாமல் இருப்பவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டும் என்பதற்காக அவர்களை ஏவுகணைகளை உருவாக்கும் பணிக்கு நியமிக்க முடியாது. சட்டவிரோத குடியேறிகளைக் கண்டறிவதற்காக ஜார்ஜியாவில் சோதனை நடத்தப்பட்டது. தென் கொரியாவைச் சேர்ந்த மக்கள் அங்கே பேட்டரிகளை உருவாக்கிக் கொண்டிருந்தனர். உங்களுக்குத் தெரியும் பேட்டரிகளை உருவாக்குவது மிகவும் சிக்கலான வேலை. மிகவும் ஆபத்தானதும்கூட. அதிக அளவில் வெடிப்புகள் நிகழும்.

அவர்கள் 500 - 600 பேர் இருப்பார்கள். ஆனால், அவர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அவர்கள் (ஜார்ஜியா) விரும்புகிறார்கள். இதில், எனக்கு உடன்பாடு இல்லை. உங்களுக்கும் உடன்பாடு இருக்காது என்பது எனக்குத் தெரியும். திறமையானவர்களை நாம் தக்கவைத்துக்கொள்ள வேண்டும்." என தெரிவித்தார்.








# ஆப்கானில் 10 இல் 9 குடும்பங்கள் பசியால் வாடுகின்றனः ஐ.நா. தகவல்

ஆப்கானிஸ்தானில் 10 இல் 9 குடும்பங்கள் பசியால் வாடுகின்றன எனவும் கடனில் சிக்கித் தவிப்பதாகவும் ஐ.நா. மேம்பாட்டுத் திட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்ட அறிக்கையில், ஆப்கனின் பொருளாதார நிலை குறித்து சில தரவுகளை வெளியிட்டுள்ளது.

சமீப காலமாக வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் ஈரானில் இருந்து ஆப்கானியர்கள் அதிக அளவில் நாடு திரும்பும் கட்டாயத்துக்கு ஆட்பட்டுள்ளனர். சுமார் 23 லட்சம் பேர் இவ்வாறு நாடு திரும்பி உள்ளனர். இவ்வாறு நாடு திரும்பிய 1,500 குடும்பங்கள் உட்பட 49,000 குடும்பங்களில் நாடு தழுவிய அளவில் ஐ.நா. மேம்பாட்டு திட்டத்தின் சார்பில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

வேலைவாய்ப்பு, வீட்டு வசதி, குடிநீர் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் இன்றி ஆப்கனிஸ்தான் மக்கள் நீண்டகாலமாக பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்நிலையில், சமீப காலத்தில் வெளிநாடுகளில் இருந்து 23 லட்சம் பேர் ஆப்கனிஸ்தானுக்கு திரும்பி உள்ளனர். இதனால், பற்றாக்குறை இன்னும் அதிகரித்துள்ளது. சுகாதாரம், சுத்தமான குடிநீர், கல்வி ஆகியவை வெகுவாக சரிந்துள்ளன. குறிப்பாக, கிராமப்புறங்களில் இன்னும் குறிப்பாக கிராமப்புற பெண்கள் மத்தியில் இவற்றுக்கான அணுகல் சாத்தியமற்றதாக உள்ளது.

ஆப்கனிஸ்தானில் 10இல் 9 குடும்பங்கள் உண்ணும் உணவின் அளவை குறைப்பது, சொத்துகளை விற்பது, கடன் வாங்குவது போன்ற எதிர்மறை நடவடிக்கைகளின் மூலம் சமாளிக்கின்றன. ஆப்கனிஸ்தானிலேயே தொடர்ந்து இருந்து வரும் குடும்பங்களில் 81 சதவீத குடும்பங்களும், வெளிநாட்டில் இருந்து திரும்பிய குடும்பங்களில் 88 சதவீத குடும்பங்களும் கடனால் தவித்து வருகின்றன.

நங்கர்ஹார், குனார், சமங்கன் மாகாணங்களில் சமீபத்தில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கங்கள், திடீர் வெள்ளம், வறட்சி ஆகியவை இம்மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதித்துள்ளது. குடும்பத் தலைவர் இல்லாததால் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் இன்னும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளன. வருமானம் ஈட்டும் ஆண்கள் இல்லாத நிலையில், பெண்கள் வேலைக்குச் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் அத்தகைய குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஐநா உயர் அதிகாரி கன்னி வக்னராஜா தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட முதலீடுகள் காரணமாக சில பகுதிகளில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஐ.நா. மேம்பாட்டு திட்டம், தனது கூட்டாளிகளுடன் இணைந்து கிழக்கு, வடக்கு மற்றும் மத்திய பிராந்தியங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வருகிறது. இதன்மூலம் இப்பகுதிகளில் மின்சாரம், சுகாதாரம், குடிநீர், வேலைவாய்ப்பு ஆகியவை மேம்பட்டு வருகின்றன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.









# தாளையடி கடற்கரைக்கு வருபவர்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தல்

## பலத்த காற்று வீசுவதுடன் கடலும் கொந்தளிப்பாகக் காணப்படுகிறது

(பூ.லின்ரன்)

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்பகுதிக்கு வரும் சுற்றுலாவாசிகள் கடலுக்குள் இறங்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. வருபவர்கள் மிகவும் அவதான மாக இருக்கும்மாறு வடமராட்சி கிழக்கு பிரதேச மக்கள் கேட்டு நிற்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு தாளையடி கடற்கரை பகுதிக்கு அதிக எண்ணிக்கையான சுற்றுலாவாசிகள் நாளாந்தம் வருகை தந்து பொழுதை கழிப்பதுடன்,அதில் சிலர் கடல் விளையாட்டுக்களிலும் ஈடுபடுகின்றார்கள். மற்றும் சிலர் புகைப்படங்கள் எடுப்பது கடலில் குளிப்பது, நீச்சல் அடிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் தற்போது வடமராட்சி கிழக்கு கடற்பகுதிகளில் அதிகளவான காற்று வீசுகின்றது. கடலும் அதிக கொந்த ளிப்பான நிலையில் காணப்படுகிறது.



ஆகவே தாளையடி கடற்கரைக்கு வரும் சுற்றுலாவாசிக ளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு யாரும் கடலுக்குள் இறங்க வேண்டாம் எனவும், கடலுக்கு மிக அண்மித்த பகு திக்கு செல்ல வேண்டாம் எனவும் அப்பகுதி மீனவர்களால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# வேளாண்மையை அழித்த 65 மாடுகள் பிடித்து அடைத்து வைக்கப்பட்டுள்ளன

## திருகோணமலை, பாட்டாளிபுரம் பகுதியில் சம்பவம்









(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, பாட்டாளிபுரம் பகுதியின் நாகம்மாள் விவசாய சம்மேள னப் பிரிவில் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மையை அழித்த 65 மாடு கள் விவசாய சம்மேளனத்தினால் நேற்று முன்தினம் செவ்வாய் இரவு பிடிக்கப்பட்டு அடைத்து வைக்கப்பட்டுள் ளன.

பாட்டாளிபுரம் – காயங்கேணி,வேலப் பெருமாள் வெளிகளில் உட்புகுந்து வேளாண்மைகளுக்குச் சேதம் விளை வித்த மாடுகளே இவ்வாறு விவசாய சங் கத்தினால் பிடிக்கப்பட்டு அடைத்து வைக் கப்பட்டுள்ளன.

மாடுகளால் விவசாயத்துக்கு ஏற் பட்ட பாதிப்புக்களை விவசாய உத்தி யோகத்தர்கள் வந்து பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுத்து விவசாயிக ளுக்கு பாதிப்புக்கான நஷ்ட ஈட்டைப் பெற்றுத்தரும் வரை அடைத்து வைக் கப்பட்டுள்ள மாடுகளை வெளியில் விட மாட்டோம் என பாட்டாளிபுரம் விவசா யிகள் தெரிவிக்கின்றனர்.







# பொலன்னறுவை அருகே இரு பஸ்கள் மோதிய விபத்தில் ஐவருக்குக் காயம்!

**(உடப்பு க.மகாதேவன்)**

மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியில், பொலன்னறுவை பந்திவெவ 21 ஆம் கிலோமீட்டர் சாலையோரத்தில் நேற்றுக் காலை நேரத்தில், இரண்டு தனியார் பயணிகள் பஸ்கள் ஒன்றுடன் ஒன்று மோதின.

இதில் ஐந்து பேர் காயமடைந்து பொலநறுவை மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சாரதி உட்பட பயணிகள் சிலருக்கு காயம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலதிக விசாரணைகளை பொலன்னறுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியில் வடக்கு – கிழக்கைக் கைவிட்ட அரசு!

## சத்தியலிங்கம் எம்.பி. விசனம் தெரிவிப்பு



வடக்கு – கிழக்கு மாகாணங்களின் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தில் அரசாங்கம் முழுமையாக கைவிட்டுள்ளதாகவும், வடக்கு – கிழக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் எந்தத் திட்டமும் அரசினால் முன்வைக்கப்படவில்லையெனவும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

2030 இல் 8 பில்லியன் வருமானத்தை சுற்றுலாத் துறையிலிருந்து எதிர்பார்க்கிறீர்கள். அதற்கு 4 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரவேண்டும் என எதிர் பார்க்கிறீர்கள். ஆனால் உங்களது பாதீட்டில் சுற்றுலாத் துறை சார்ந்து வடக்கு – கிழக்கு மாகாணங்கள் முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது. சுற்றுலா மேம்பாட்டிற்கு எத் திட்டமும் இல்லை. சுற்றுலாவிற்கான உட்கட்டமைப்பு வசதிகள் அங்கில்லை. சுற்றுலா மற்றும் உபசரிப்பு துறையில் முதலீடுகள் இல்லை. வடக்கில் சுற்றுலாவை மேம்படுத்த சந்தைப்படுத்தல் தொடர்பாகத் திட்டம் ஏதுமில்லை. ஆகையால் இவ்விடயம் பற்றி அதிக கவனமெடுத்து வடக்கு – கிழக்கில் சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். – என தெரிவித்தார்.









# டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் 2025 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் 2025 ஆம் ஆண்டுக்கான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நேற்று முன்தினம் டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் வளாகத்தில் ஜனாதிபதியும் டிஜிட்டல் பொருளாதார அமைச்சருமான அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களான இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு, ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் GovTech (Pvt) டுவன ஆகிய நிறுவனங்களின் டிஜிட்டல் மேம்பாட்டுத் திட்டங்களின் எதிர்காலச் செயற்பாடுகளை ஆராய்வது, செயல்படுத்துவதில் தாமதத்தை ஏற்படுத்தும் தடைகளை அடையாளம் காண்பது மற்றும் அந்த நோக்கத்திற்காக தேவையான கொள்கை மற்றும் நிர்வாக முடிவுகளை எடுப்பது போன்றவற்றை நோக்காகக் கொண்டு இந்தக் கூட்டம் நடைபெற்றது.

2026ஆம்ஆண்டுக்கானமுன்மொழியப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கையில் மையக் காரணியாக உள்ள டிஜிட்டல் பொருளாதாரத்துடன் தொடர்புபட்ட அரச முதலீடுகளுக்கு வலுவான அடித்தளத்தை அமைப்பது அவசியம் என்று ஜனாதிபதி இந்தக் கலந்துரையாடலில் வலியுறுத்தினார்.

மேலும், நாடு முழுவதும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் மற்றும் ஏனைய டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு தனியார் முதலீட்டாளர்கள் மற்றும் சந்தையை கையாள்பவர்களுக்கு மிகவும் உகந்த சூழலை உருவாக்களடுக்கவேண்டியமுன்னெடுப்புகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.



“கிராமத்துக்குதொடர்பாடல்”திட்டத்தை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அந்த திட்டத்தின் கீழ் மூன்று ஆண்டுகளில் 500 கோபுரங்களை நிறுவும் இலக்கு குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்தோடு,தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதில் தற்போது நிலவும் தாமதத்தை துரிதமாக சீரமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

மேலும், இலங்கைக்குத் தனித்துவமான டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை விரைவுபடுத்துதல், அமைச்சின் நிர்வாக மற்றும் செயற்பாட்டு கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், புதிய டிஜிட்டல் பொருளாதார அதிகாரசபையை நிறுவுதல் மற்றும் வலுவான டிஜிட்டல் பொருளாதாரத்தை உருவாக்கத் தேவையான மனித வளங்களை உருவாக்குதல் என்பன குறித்தும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.







# இன்றைய ராசி பலன்கள் -13.11.2025




இன்று பதற்றமான சூழ்நிலைகள் காணப்படும். அதனை சமாளிப்பதற்கு கால தாமதமாகும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல. சில சௌகரியங்களை விட்டு கொடுக்க நேரும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்புக்காக பணம் செலவு செய்ய நேரும். தேவையற்ற செலவினங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று ஆன்மீகத்தில் ஈடுபடவேண்டிய சூழல் ஏற்படும். அது உங்களுக்கு ஆறுதலைத் தரும்.

இன்று வெற்றிகரமான பலன்களை காண்பதற்கு நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். இன்று பணிகள் நிலுவையில் இருக்கும். தாமதங்கள் காணப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இதனைத் தவிர்த்தல் நல்லது. அமைதியாக இருக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரியுங்கள்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன்கள் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள்களில் வலி காணப்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் அமைதி பெறலாம்.




இன்று உங்களுக்கு மிகவும் சாதகமான நாள். உங்களின் உறுதியும் தைரியமும் உங்களுக்கு நல்ல பலனை அளிக்கும். மொத்தத்தில் இன்று காணப்படும் வளர்ச்சி உங்களுக்கு தன்னம்பிக்கையைக் கொடுக்கும்.

இன்று புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். பணியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் திறமை மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

நீங்கள் உங்கள் துணையுடன் மனம் திறந்து கருத்துக்களை பரிமாறிக் கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணம் கிடைக்கக் கூடிய அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன உறுதி காரணமாக இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.




இன்று உற்சாகமான நிலையை பராமரிப்பீர்கள். அதிக சிந்தனைகளை தவிர்த்தல் வேண்டும். ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் அமைதி பெறலாம்.

பணிகள் அதிகமாக காணப்படும். எனவே தவறுகள் நேரலாம். எனவே கவனமாகப் பணியாற்ற வேண்டும்.

உங்களின் எரிச்சல் மனப்பான்மையை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை நட்பு முறையில் அணுக வேண்டும்.

கவனக்குறைவு காரணமாக பண இழப்பு ஏற்படலாம். தேவையற்ற செலவினங்கள் ஏற்படலாம்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும் நாள். மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்க வேண்டும். உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்க தெளிவான மனதுடன் இருக்க வேண்டும்.

பணிகள் கடினமாக காணப்படும். பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் தோன்றும் கசப்பு உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தைக் கெடுக்கும்.

இன்று கூடுதலான தேவையற்ற செலவுகள் ஏற்படும். இதனால் கவலைகள் உண்டாகும். பண இழப்புகளும் காணப்படும்.

முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் நல்ல பலனைத் தரும்.




இன்று பலன்களில் ஏற்றத்தாழ்வு காணப்படும். உங்கள் பணிகள் சுமுகமாக நடக்க நீங்கள் அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். நல்ல பலன்களைப் பெற நம்பிக்கையோடு இருங்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். சக பணியாளர்களிடம் கவனமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் பிரியமானவரை புரிந்துகொண்டு நடந்துகொள்ளுங்கள்.

இன்று நிதிநிலை சீராக இருக்காது. இன்று நிதிநிலையை சமாளிப்பது கடினம்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண் பரிசோதனை செய்துகொள்வது நல்லது.




இன்று முன்னேற்றமான நாள். எதிர்காலம் பற்றிய பரந்த நோக்கு கொண்டிருப்பீர்கள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெற கடினமாக உழைப்பீர்கள். இடையில் ஏற்படும் தடைகளை முறியடிப்பீர்கள்.

இன்று பலன் எதையும் எதிர்பார்க்காமல் பணியாற்றுங்கள். இதன் மூலம் குறித்த நேரத்தில் பணிகளை முடித்து தர இயலும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெற முடியம்.

உங்கள் துணையிடம் நேர்மையாக விசுவாசமாக இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் அபரிமிதமாக காணப்படும். இன்று வங்கியிருப்பை நல்ல முறையில் பராமரிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். உங்கள் ஆற்றலை சிறந்த முறையில் பராமரிப்பீர்கள்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் இலக்குகளை அடைய இன்றைய நாளை பயன்படுத்துவீர்கள். உங்கள் வளர்ச்சி இன்று உறுதி. இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் வேலைகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் கடின உழைப்புக்கு உங்கள் மேலதிகாரிகளிடம் இருந்து அங்கீகாரம் பெறுவீர்கள்.

உங்களின் நம்பிக்கை உணர்வுகளை உங்கள் துணையிடம் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணபுழக்கம் சீராக இருக்கும். உங்கள் ஆற்றலை நிதி வளர்ச்சிக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் காணப்படாது. நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -13.11.2025




இன்று நீங்கள் எந்த விஷயத்தையும் இலேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று புதிய மனிதர்களின் சந்திப்பை பெறுவீர்கள். இதனால் உங்களின் தொடர்பு வட்டாரம் விரிவடையும். வாழ்க்கை சிறப்பாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று மும்மரமாக காணப்படுவீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும் என்ற காரணத்தால் திறமையான முறையில் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேற்றுமை அல்லது விவாதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் துணையுடன் நட்பாக பழக வேண்டும்.

இன்று நிதிநிலைமை சுமாராக இருக்கும். பணம் வருவதற்கான அதிர்ஷ்டம் குறைவு.

தூக்கமின்மை மற்றும் மன உளைச்சல் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று நற்பலன்கள் கிடைக்கும் நாள். முன்னேற்றத்தை நோக்கி செல்வீர்கள். முக்கியமான முடிவுகள் இன்று பலன் தரும்.

உங்கள் தனித் திறமைக்காக பாராட்டப்படுவீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்களின் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் பிரியமானவரை மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் வைத்திருங்கள்.

இன்று பணப்புழக்கம் திருப்தி அளிக்கும். உங்கள் சேமிப்பு திறன் அதிகரிக்கும். லாபம் தரும் புதிய முதலீட்டு முயற்சிக்கான திட்டங்களை வகுக்கலாம்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உயர்ந்த ஆற்றலும் உறுதியும் உங்களிடம் காணப்படும்.




இன்று நீங்கள் தன்னம்பிக்கை இழக்கக் கூடிய கடினமான சூழ்நிலை காணப்படும். நம்பிக்கையுடன் சவால்களைக் கையாள வேண்டும். பிரார்த்தனையில் ஈடுபடுவது நல்ல பலனைத் தரும்.

குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளை முடிப்பதில் தாமதங்கள் நேரலாம். இது உங்களுக்குக் கவலையை ஏற்படுத்தும்.

உங்களின் சிறந்த பேச்சாற்றல் மூலம் உங்கள் துணையிடம் நல்லுறவை கொண்டிருப்பீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படுத்த முடியும்.

இன்று பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் பிரியமானவரின் ஆரோக்கியத்துக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று நீங்கள் விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன்களை தரக்கூடிய திட்டங்களை வகுப்பீர்கள்.

பணியிடச் சூழல் முன்னேற்றகரமான பலன்களைத் தரும். கூடுதல் ஊக்கத் தொகை அல்லது சலுகைகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

பணியில் காணப்படும் பதற்றம் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவீர்கள். இத்தகைய சூழ்நிலைகளை தவிர்க்க வேண்டும். இருவரிடையே நல்லுறவு ஏற்பட விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பணபுழக்கம் சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிக்கும் ஆற்றல் உயரும். நிதி பாதுகாப்பு காணப்படும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.

# 200 ரூபா சம்பள அதிகரித்தமை தொடர்பில் தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

## அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவிப்பு

சம்பள அதிகரிப்பு தொடர்பில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என பெருந்தோட்டத் துறை அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ள 200 ரூபாய் நிதியை இடைநிறுத்துவதற்கு, சிலர் சதித்திட்டம் தீட்டுவதாகவும் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

அரச நிதியை தனியார் துறையினருக்கு எவ்வாறு வழங்குவது? என்ற அடிப்படையில் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் வழங்க எதிர்பார்க்கும் சலுகையை இல்லாது செய்யும் வகையில், அந்த முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட தொழிலாளர்களே ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் கடந்த காலங்களில் பெருந்தோட்டத்துறையினரின் மேம்பாட்டுத் திட்டங்களுக்காக, வெளிநாடுகளினூடாக கிடைத்த நிதியை, ஆட்சியாளர்கள் நெருங்கிய நிறுவனங்களுக்குப் பகிர்ந்தளித்துள்ளனர் எனினும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னர் ஆட்சி நடத்திய பச்சை, நீல ஆட்சியாளர்களின் காலத்திலும் இதே நிலையே பேணப்பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தொழிலாளர்களுக்கு 200 ரூபாய் வழங்குவதற்காகப்வரவுசெலவுதிட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி போதுமானதா என நாடாளுமன்ற உறுப்பினர்களே கேள்வியை முன்வைத்துள்ளனர் என அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், தொழி



லாளர்களுக்கு 200 ரூபாய் சம்பள அதிகரிப்பு செய்வதற்கு எவ்வித தடையும் இல்லை எனவும், எனினும் அதில் சட்டச் சிக்கல்கள் காணப்பட்டால் அதனை நிவர்த்திக்க வேண்டியது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட அமைச்சர் சமந்த வித்தியாரத்ன, அவ்வாறான சட்டச் சிக்கல்கள் ஏற்பட்டால் அதனை அரசாங்கம் உரிய முறையில் நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கும் என உறுதியளித்தார்.